முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா எண் 19, திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

19—

பாலம்

***7265—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே வள்ளக்கடவு என்ற இடத்தில் பாலம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருக்கக்கூடியது இது. திக்குறிச்சி என்னும் இடத்தில் வள்ளக்கடவு பகுதியில் இந்தப் பாலம் தேவைப்படுகின்றது. சிவாலயக் கோயிலான திக்குறிச்சி மகாதேவர் கோயிலில் சிவாலயத் திருவிழாவின்போது இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லும் பகுதி அது. உலகப் புகழ் பெற்ற சிதறால் ஜெயின் மலைக் கோயிலும் இங்கு இருக்கின்றது. இதனால் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் 12 கி.மீ. சுற்றி வருவதை மாற்றி, 5 கி.மீ. தொலைவில் பயணிக்க முடியும். கடந்த 2007 ஆம் ஆண்டு இந்தப் பாலத்திற்கான மதிப்பீடு

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தயாரிக்கப்பட்டு அது இன்னும் கிடப்பிலேயே இருந்து கொண்டிருக்கின்றது. எங்களின் நீண்டகாலக் கோரிக்கையை மிக விரைவில் நிறைவேற்ற அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, வரக்கூடிய ஆண்டில் அங்கே பாலப் பணி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியைச் சார்ந்த வள்ளக்கடவு என்ற இடத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வினா எழுப்பியிருக்கின்றார்கள். அந்த இடத்திற்கு அருகில் மாவட்ட இதர சாலையான பயணச் சாலை மற்றும் திக்குறிச்சி சிதறால் சாலைக்கு இடையில் தாமிரபரணி ஆறு ஓடுகின்றது. இந்த இரண்டையும் இணைக்கின்ற வகையில் இருக்கக்கூடிய மண் சாலை, எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத சாலையாக இருக்கின்றது. எனவே, அது உள்ளாட்சி அமைப்புக்குரிய சாலையாகத்தான் இருக்கும் என்று கருதுகின்றோம். அந்த அடிப்படையில் இருந்தாலும், அந்த இடத்தில் பாலம் கட்ட வேண்டுமென்றால், சுமார் 9 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. அதற்காக மத்திய அரசினுடைய உதவியை நாடியிருக்கின்றோம். நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறையிலிருந்து மத்திய அரசின் சாலை நிதித் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான அனுமதி கிடைத்தவுடன் அங்கே பாலம் அமைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மத்திய அரசின் அனுமதிக்காக இந்தப் பாலம் சம்பந்தமாக கடிதம் சென்றிருக்கின்றது. எனவே, மிக விரைவிலே அனுமதியைப் பெறுவதோடு, அந்தப் பாலம் அமையும் வரை, ஏற்கெனவே அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டிருந்த அரசுப் படகும் மிகவும் பழுதடைந்துவிட்டதால், அந்தப் படகை மாற்றி, புதிய படகை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுப் போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்றார்களோ, அப்பொழுதெல்லாம் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் பாலங்களும், ரோடுகளும் நமது மக்களுக்காகப் போடப்படுகின்றன. என்னுடைய நாகர்கோவில் சட்டப் பேரவைத் தொகுதியில் மேல்மணக்குடி மற்றும் கீழ்மணக்குடி இணைப்புப் பாலம், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டது. சமீபத்தில் ஏற்பட்ட சுனாமியால் அது பாதிப்படைந்து இடிந்துவிட்டது. போக்குவரத்துக்கு மிகவும் அவசியமாக இருக்கக்கூடிய இந்த மேல்மணக்குடி, கீழ்மணக்குடி இணைப்புப் பாலம் எப்பொழுது கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற, கடந்த சுனாமி அலையின்போது பாதிக்கப்பட்ட, மேல்மணக்குடி, கீழ்மணக்குடி என்ற இடத்தில் உள்ள அந்தப் பாலத்தை நான் நேரடியாக ஆய்வு செய்தேன். அந்தப் பாலம் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் தற்காலிகமாகச் செல்வதற்கு இரும்புப் பாலம் அமைக்கப்பட்டு போக்குவரத்து செவ்வனே நடைபெற்று வருகின்றது. மேலும், புதிய பாலம் அமைப்பது தொடர்பாக அந்தப் பகுதி மக்களின் கருத்தை அறிய நடைபெற்ற நேர்காணலில் பல சிக்கல்கள் ஏற்பட்டதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு அப்பகுதி மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியதன்மூலம் புதிய பாலம் கட்டுவது இறுதி செய்யப்பட்டது. மேலும், அந்தப் பாலம் அமைக்க உலக வங்கியிடம் நிதி கோரியபோது உலக வங்கியும் சம்மதம் தெரிவித்துள்ளது. இருந்தபோதிலும், மத்திய அரசின் சுற்றுச்சூழல்

2008 நவம்பர் 12]

துறையின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதற்காக மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையை அணுகியுள்ளோம். அந்த அனுமதி கிடைத்ததும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி விரைவில் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, நங்கவரம் குறிச்சியில் ஒரு மேம்பாலம் வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. அங்கே பாலம் இல்லாத காரணத்தால், குறிச்சி பகுதியில் வாழ்கின்ற மக்களும், பள்ளி மாணவர்களும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் ஏழரை கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு பாலம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பலமுறை வற்புறுத்தியிருக்கிறேன். மேலும், சட்டமன்றத்திலே பொன்விழா கண்ட நம்முடைய சரித்திர நாயகர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 1957-லே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அந்த நங்கவரம் பகுதியானது விவசாயிகளின் உரிமைகளுக்காக ஏர் உழுது போராட்டம் நடத்திய, மிகுந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியாகும். ஆகவே, அந்த நங்கவரம் பகுதி மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பாலத்தைப் பற்றி எங்களிடம் கடிதம் மூலமாகவும், பலமுறை நேரிலும் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அதை துறை பரிசீலித்து வருகிறது. எதிர்காலத்திலே அந்தப் பாலம் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.